**சிறப்பு சார்பு நீதிமன்றம் (LAOP) எண்.2 , ஜெயங்கொண்டம்**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| வழக்கு | : | OS.294/2024 | கிராமம் | | கரடிக்குளம் |
| சாட்சி | : | வா.சா–1 | வட்டம் | : | உடையார்பாளையம் |
| பெயர் | : | காமராஜ் | வயது | : | 48 |
| த/பெ | : | செல்வராஜ் | தொழில் | : | ஆட்டோ ஓட்டுநர் |

2025–ம் ஆண்டு ஆகஸ்ட் 04–ம் நாள் (1969–ம் ஆண்டு 54–வது விதியின் 9–வது பிரிவின் ஏற்பாட்டின்படி) திரு.தனஞ்செயன், கிரேடு–II பெஞ்ச் கிளர்க் அவர்களால் உறுதிமொழி செய்யப்படுகிறது.

**முதல் விசாரணை**

நான் இவ்வழக்கில் வாதி. வா.சா.1 ஆக சாட்சியம் அளிக்கிறேன். என் தரப்பில் நான் தாக்கல் செய்துள்ள நிரூபண வாக்குமூலத்தை என்னுடைய முதல் விசாரணையாக ஏற்க வேண்டுகிறேன். இந்த பிரமாண வாக்குமூலத்தில் உள்ள கையொப்பம் என்னுடையது. அதில் சொல்லப்பட்ட விவரங்களை நான் படித்துப்பார்த்து சரி என்று என்னால் ஒப்புக்கொள்ளப்பட்டு நான் என்னுடைய கையொப்பங்களை இட்டேன். கீழ்கண்ட ஆவணங்களை எனது தரப்பு ஆவணங்களாக குறியீடு செய்ய பிரார்த்திக்கிறேன்.

1. தாவா சொத்திற்கான அ பதிவேட்டு நகல் வா.சா.ஆ.1.

2. எனது தாத்தா பக்கிரிசாமி பெயரில் உள்ள பட்டா பாஸ் புத்தகம் வா.சா.ஆ.2.

3. தாவா சொத்திற்குரிய நத்தம் பட்டா நகல் வா.சா.ஆ.3.

4. தாவா சொத்திற்கான புலவரைபடம் வா.சா.ஆ.4.

5. 04.07.2023 தேதியிட்ட மாவட்ட வருவாய் அலுவலர் கடிதத்தின் நகல் வா.சா.ஆ.5.

6 11.10.2023 தேதியிட்ட வழக்கறிஞர் அறிவிப்பு அலுவலக நகல் வா.சா.ஆ.6.

7. 13.10.2023 தேதியிட்ட 2 ம் பிரதிவாதி தரப்பு வழக்கறிஞரின் பதில் அறிவிப்பு வா.சா.ஆ.7.

8. தாவா சொத்திற்கான SLR நகல் வா.சா.ஆ.8.

**பிரதிவாதிகள் தரப்பு வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.**

திறந்த நீதிமன்றத்தில் வைத்து சாட்சி சொன்னவை என்னால் தட்டச்சருக்கு திருப்பி சொல்லப்பட்டு அவரால் தட்டச்சிடப்பட்டு சாட்சிக்கு படித்து காட்டி அவரால் சரி என ஒப்புக் கொள்ளப்பட்டு கையெழுத்திடப்பட்டது.

/ ஒப்பம் / V. பிரேம்குமார்,
சிறப்பு நீதிபதி எண்.2 (FAC),
ஜெயங்கொண்டம்.